# இந்திய கடற்படையினர் உஷார் நிலையில்


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 150 வெள்ளி 13-07-1990 (ஆனி 29) துல்ஹஜ் 19


### அரசபடையினரை கண்காணிக்கவும் தமிழ் அகதிகளை பாதுகாக்கவும்

அகதிகளாக இந்தியாவுக்கு வரும் தமிழரைத் தாக்குவதுடன் அவர்களைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா கடற்படை இந்தியக்கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதனைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு இந்தியக் கடற்படைக் கப்பல்கள் சில ராமேஸ்வரம் கடலில் தரித்து நிற்பதாக அறிவிக்கப்படுகிறது ஸ்ரீலங்கா கடற்படையினரைக் கண்காணிப்பதுடன், அகதிகளாக வரும் தமிழர்களைக் காப்பதற்காகவே இவ் இந்தியக் கப்பல்கள் தரித்து நிற்பதாக பி. பி. ஸி நேற்றிரவு அறிவித்தது

# கொக்காவில் முகாம் நிர்மூலம்

# 45 ராணுவம் துடித்து மடிவு!

## ஆயுதங்களும் பெருமளவில் மீட்பு

கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. என நேற்று அறிவிக்கப்பட்டது. இவ்வதிவேகத் தாக்குதலில் நாற்பத்து ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

10ம் 11ம் திகதிகளில் நிகழ்ந்த இப்பெரும் தாக்குதலில் இம் முகாமின் கட்டிடங்கள் யாவும் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

அங்கிருந்த சகல இராணுவ வாகனங்களும் முற்றாகச் சேதத்திற் குள்ளாக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டது.

கட்டிட இடிபாடுகளுக்குள் பல இராணுவத்தினர் சிக்கி கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் எனினும் விபரங்கள் பூரணமாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாற்பத்து ஐந்து இராணுவத்தினரது சடலங்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்

4 ஆம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினியும் தகர்ந்தது

(கிளிநொச்சி நிருபர் கே. சந்திரசேகரம்)

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளினால் ரூபவாகினி கூட்டுத்தாபன கோபுரமும் தகர்க்கப்பட்டது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்புச்சாதனப் பொருட்கள் மற்றும் கட்டிடங்களும் விடுதலைப்புலிகளினால் புல்டோசர் கொண்டு முற்றாகதகர்க் கப்பட்டுள்ளது.

ஆதேவேளை இத்தாக்குதலைத் தொடர்ந்து ஹெலிகப்டர்பொம்மர்கள் கொக்காவில் முருகண்டி, கிளிநொச்சி, ஆகியபகுதிகளை தாளப் பறந்து நோட்டமிட்டு வருவதாக நமது கிளிநொச்சி நிருபர் அறிவிக்கிறார் 35

## ஆனையிறவில் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து 100 யார் தூரத்தில் காவல் அரண்கள் அமைக்க முனைந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளதாக தெரிவி

...4 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருட்கள் இன்று இங்கு வந்து சேரும்

உணவுப் பொருட்களை ஏற்றச் சென்ற லொறிகள் உணவுப் பொருட்களுடன் இன்றையதினம் யாழ் திரும்புகின்றன.

மதவாச்சியில் நேற்றுக் காலை உணவுப்பொருட்கள் கொழும்பு லொறிகளில் இருந்து பரிமாறப்பட்டன. நேற்றைய தினமே இந்த லொறிகள் பயணத்தை ஆரம்பித்த போதும் இன்றைய தினமே இங்கு வந்து சேருமென தெரிவிக்கப்பட்டது. (3)

## தள்ளாடி முகாம் இராணுவம் தள்ளாடியது

நேற்றுக்காலை 9.30 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்துடன் தள்ளாடிக்கும் திருநாவலுக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் கடும்

...4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம் தழுவியோர்

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணம் தழுவிய விடுதலைப் புலிகள் பெயர் விவரம்.

மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் உஷா (முள்ளியவலை), மாலா (வல்வெட்டித்துறை), சாலினி (வல்வெட்டித்துறை), பிரியங்கா (வல்வெட்டித்துறை), அஐந்தா (கல்வியங்காடு)) குமாரி (திருகோணமலை, ஆகியோரும்.

கப்டன் பாபு (மன்னார்), கப்டன் சுகுமார் (திருகோணமலை), லெப்டினன்ட் நியூட்டன் (கிளிநொச்சி), லெப்டினன்ட் மாவி (துணுக்காய்), 2-ம் லெப்ட் ஹமீட் (துணுக்

—4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் ஓயாத தாக்குதல் தாளாத வேதனை இவருக்கு

''விடுதலைப் புலிகள் பலாலி, கோட்டை, கிளிநொச்சி இராணுவமுகாம்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்' என்று நேற்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன சலித்துக் கொண்டார்.

கொழும்பில் அவர் இது பற்றி தகவல் தெரிவிக்கையில் புலிகள் இம் முகாம்கள் மீதான தாக்குதலை நிறுத்துகிறார்களில்லை. விட்டு விட்டுத் தாக்குதல்

...4 ஆம் பக்கம் பார்க்க

## கணவனுக்கு 'கிப்ஸ்' தேடும் ஆசிரியை; மாணவர் நிலை?

குடாநாட்டில் தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலையைத் தமக்குச் சாதகமாக்கி ஆசிரிய, ஆசிரியைகள் பலரும் தத்தம் சொந்தக்கடமைகளில், கடமையை உதாசீனம் செய்து ஈடுபட்டுள்ளதாகக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது. கிராமச் சூழலில் உள்ள பாடசாலைகள் பலவும் செயற்படக் கூடிய நிலையில் உள்ளதாகவும் பிள்ளைகள் பெற்றோரின் அக்கறையினால் இப்பாடசாலைகளுக்கு

—04ஆம் பக்கம் பார்க்க

★ ஸ்ரீலங்கா அரசு தர்பார்; தி. மு. க. அரசு உணர்ச்சிப் பிழம்பாகிறது

# ஈழத்தமிழர் ஆதரவு ஹர்த்தால்

# தமிழகம் தழுவிய நிலையில்

இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் அப்பாவித் தமிழர்கள் நாளாந்தம் இராணுவத்தினால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து அதற்குத்தக்கதோர் நல்முடிவினை மேற்கொள்ளக்கோரி கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எதிர்வரும் 20-ம் திகதி தமிழகம் முழுவதும் கடையடைப்பு, பொதுவேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட தினம் காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணிவரை இந்தக் ஹர்த்தால் நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும் என இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு சர்வதேச சமூக உதவி நாடுவது இந்தியாவை ஒதுக்கிவைக்கும் முயற்சியாகக்கருதப்படவேண்டியுள்ளது. என்றும் கலைஞரால் தெரிவிக்கபபட்டுள்ளது.

கலைஞர் கருணாநிதி தலைமையில் நேற்று திராவிட

...4 ஆம் பக்கம் பார்க்க

## விஜயபுரமாகிறது

வவுனியாவில் உள்ள தவசிக்குளம் பகுதியினுள் புகுந்த இராணுவத்தினர் அக்கிராமத்திற்கு சிங்களப் பெயர் ஒன்றை சூட்டிச் சென்றுள்ளார்கள்.

''விஜயபாகுபுரம்'' என்ற சிங்களப் பெயரையே இவர்கள் சூட்டி பல இடங்களில் விளம்பரப்படுத்தியும் உள்ளார்கள். இப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப் படுவார்கள் என்றும் கூறிச்சென்

# 'திக்கம்' இப்போதுதாரர்ளம்

வடமராட்சிச் சாராய விற்பனை நிலையங்களில் திக்கம் சாராயத்தை தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உயர்தரக் குடிவகைகள் தற்பொழுது இல்லாத காரணத்தினால் இச்சாராயம் மட்டுமே விற்பனைக்கு இருக்கிறது.

போக்குவரத்துச் சிக்கல் காரணமாக வெளிமாவட்டங்களுக்குதிக்கம்சாராயத்தை அனுப்ப முடியாத நிலையும் இருக்கிறது. போத்தல் 110 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. தற்பொழுது இதற்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. (17-கி)

பழந் தமிழர் வீரக் கோலங்கள்
கோலம் : 5 (முன்னைய தொடர்ச்சி)

## ஒரு தாயின் தாலாட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது நான்
ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா;
மார்பில் தாங்கிய கணையுடனே தாயகத்தை
மீட்கும் போரில் தன்னுயிரைத் தருவதகும்
துணிந்து நின்றான்!

அவனோ; ............
கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டி
விட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான்
என்றும்,
நெடுமரம்போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா ஆவலுடன் அது காணக் களம்
புகுந்தேன்!

ஐயத்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான் ...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான்
காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்!

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்து விட்ட
படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற
துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
''ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே! நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்க்கின்றயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?''
எனக்கேட்டுத் துடித்திட்டேன்!

''வாழ்கின்றேனம்மா வீரனாக!'' என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்!-' உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?' என்றேன்.

''இங்கே'' என்றான்; கண்டு கொண்டேன்!
வலம்புரிச்
சங்கே!'' என்றவாறு தழுவிக்கொண்டேன்! கையில்;

தாங்கிப் கோரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்,
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!

''வெற்றியம்மா வெற்றி'' என்றான் - அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, ''என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த
தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!''
என்றேன்!

''ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு -வலி
உனக்குத் தாங்காதே மகனே!'' என்றேன்: அழுது
விட்டேன்

''உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ
எனக்கு;
உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா!''
என்றான்!

உயிர்விட்டான் மடிமீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளு_ன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது - நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என வாழ்த்து
கின்றேன்!

(கோலம் முற்றிற்று)

'சங்கத் தமிழ்' நூலிலிருந்து - கலைஞர் கருணாநிதி அவர்கட்கு நன்றியுடன்.

தேர்... ...'

# தாதி மாணவருக்கு எதுவுமேயில்லை

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு ஜூன் மாதத்திற்குரிய சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை.

தற்பொழுது தாதியர் பயிற்சிப் பாடசாலை மூடப்பட்டுள்ளது.

ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதுபோல் இவர்களுக்கும் முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (கி)

# வைரவர் அருள் வேண்டி

கைதடி நுணாவில் இந்து இளைஞர் மன்றமும் கைதடி நுணாவில் ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையும் இணைந்து எமது பிரதேசத்தின் அமைதி சமாதானம் என்பனவற்றுக்கும் இன்று நடைபெறும் போரில் வெற்றி கிடைக்க தெய்வ ஆசி வேண்டியும் பிரதி வெள்ளி தோறும் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். (ப. 4- ஸ்ரீ)

# இந்த வேளையில் இப்படியொரு

சகோதரன் கண்டித்ததால் மனமுடைந்த இளம்பெண் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ப3கி)

# செஞ்சொற் காவலர் பட்டமளிப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தின்போது அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ''செஞ்சொற்காவலர்'' என்ற பட்டம் சூட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

இவ்வாலய பரிபாலன சபையினரால் வழங்கப்பட்ட இக் கௌரவத்தின்போது பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பத்திரம் வழங்கி இ. ஜெயராஜ் பாராட்டப் பட்டார்.(30கி)

# சங்கானையில் 6000 அகதிகள்

(சங்கானை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் ஆறாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்து அகதிகளாகத் தங்கியிருப்பதாக புள்ளி விபரங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவசம்பு தலைமையிலான குழு செய்துள்ளது.


பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன மூலம் நிவாரணப் பொருட்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. (13.கி)

# பள்ளிவாசலில் தஞ்சம்

(மண்டைதீவு)

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களைத் தொடர்ந்து பெரும்பாலான முஸ்லிம் மக்கள் மண்கும்பான் பள்ளிவாசலில் தஞ்சமடைந்துள்ளனர்.

பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதிக்குள் சிறு சிறு குடிசைகள் அமைத்து இவர்கள் தங்கியுள்ளனர். (ப-12)




# அலைகடல் வேள்வி; அடையாது தோல்வி!

கடலலை எல்லாம் கரைனியில் மோதும்!
''கரும்புலி'' இங்கே கப்பலில் மோதும்!
''மில்லரிற்'' தொடங்கிய மிடுக்கினை இன்றே;
மீளவுங் கண்டோம், வல்வையில் நன்றே!

வாயென ஒன்று, வாய்த்திருந் தாலோ;
கடலலை கூடக் காவியம் பாடும்!
அலைகடல் நடுவே புலிகளின் யாகம்;
நிலைபெற வேண்டும், நீதியின் யோகம்!

-பாரதிசீலன்

# ஆடு நனைகிறதே என்று....

''விடுதலைப் புலிகள் தமிழர் பற்றி அக்கறை கொள்ளவில்லை ஆனையிறவில் குழாய் நீர்த்திட்டம் தடைப்படுத்தப்பட்டு விட்டதால் அங்கு உப்பு நீரையே பருக வேண்டிய நிலை உள்ளது'' என்று வடபகுதி ஆயுதப் படைத் தளபதி கூறியுள்ளார்

''ஸ்ரீ லங்கா அரசின் ஆயுதப் படையினர் வீர புருஷர்கள்'' என்றும் அவர் வர்ணித்தார். இவ்வாறு இலங்கை வானொலி தெரிவித்தது. (ஸ்ரீ)

# ஆபத்து நேரத்தில் உதவுபவை இவையே

எரிபொருளுக்குக் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெருந் தட்டுப்பாட்டால் சைக்கிள்கள் மற்றும் லான்ட் மாஸ்டர்கள் ஆகியனவையே பேருதவியாக மக்களுக்கு இருக்கின்றது,

கைதடிப் பகுதியைச்சேர்ந்த மாணவர் ஒருவருக்கு ஏற்பட்ட வலிப்பு நோயை அடுத்து அவர் சைக்கிள் ஒன்றில் கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச் செல்லப்பட்டார்.

ஆயினும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியாது போய் விட்டது.

சடலத்தை எடுத்துச் செல்வதற்கு லான்ட் மாஸ்டர் ஒன்றே உதவியது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# யுத்த வேளையிலும் மன்னிப்பு, மறுவாழ்வு

-ஆஞ்சநேயர்

''இன்றைய இறுதிக் கட்ட யுத்த காலத்தில் கூட நாம் எமது தேசத்திற்கு எதிராக செயற்பட்டோரை திருத்தி விடுதலை செய்கின்றோம். இவர்கள் அனைவரும் மக்களின் சேவைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். பூரண மனிதர்களாக வெளியேறும் இவர்கள் சிந்திப்பதற்கும் அதன்படி செயலாற்றுவதற்கும் நாம் பயிற்றுவித்துள்ளோம்''

இவ்வாறுநேற்று முன்தினம் உரும்பராய் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் பிரதேச அலுவலகத்தில் இடம்பெற்ற கைதிகள் விடுவிப்பில் பேசிய வலிகாமம் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தெரிவித்தார்-

இக்கைதிகள் விடுவிப்பில் 63 கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். இவர்களைப் பொறுப்பேற்கபெற்றோர்கள் உறவினர்கள் வந்திருந்தனர். (3ஸ்ரீ)

# உணவு கையிருப்பு ஒரு வாரத்திற்கே போதும்

கையிருப்பில் இருக்கும் உணவுப்பொருள்கள் இன்னும் ஒரு வார காலத்திற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாக அறியப்படுகின்றது,

மட்டக்களப்பு, திருமலை, வவுனியா போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக வருவோரின் தொகை மேலும் அதிகரிக்குமாயின் கையிருப்பில் இருக்கும் உணவுப் பொருட்கள் யாவும் கூடிய சீக்கிரம் முடிவடைந்து விடும். இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக்கு மென உயர் அதிகாரி ஒரு தெரிவித்தார்.

கிளிநொச்சி பரந் போன்ற பகுதிகளில் லினை வாங்குவதற்கு குள்ள நிறுவனங்களு அல்லது அமைப்புகளு தொடர்பு கொள்ளக்கூ நிலையில் இல்லையென வங்கிகள் இயங்காத காசோலைகளின் உதவிய பொருட்கள் வாங்க யாத நிலை இருப் தாக தெரிவிக்கப்பட்டது. (68

அரசியல் வட்டாரங்களில் பலத்த சந்தேகம்

# மாகாணசபைத் தேர்தலை நடத்த தற்போது ஏன் இந்த அவசரம்?

வடக்கு, கிழக்கு மாகாண சபைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை அரசு தற்போதைய சூழ்நிலையில் கோரியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் இம் மாதம் 25-ம் திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்படுமென அரசாங்கம் தற்பொழுது அறிவித்துள்ளது.

இந்த வேட்பு மனுக்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள செயலகங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆனால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அனேகமான பகுதிகளில் தற்பொழுது மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் தமிழரின் அபிமானத்திற்குரிய சில குழுக்களோ அன்றி சுயேட்சைக் குழுக்களோ இத்தேர்தலுக்குரிய வேட்பு மனுக்களை சமர்ப்பிக்கமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் அரசின் ஆதரவான சில கட்சிகளும், தமிழ்க்குழுக்களும் மட்டுமே அரசபடைகளின் 'ஒத்துழைப்புடன்' தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யக் கூடியதாக இருக்குமெனவும் கருதப்படுகின்றது.

அத்துடன் வடக்கு, கிழக்குப் பகுதியில் உள்ள பல தமிழ் வாக்காளர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துவிட்ட இவ்வேளையை 'தேர்தல் நடாத்துவதற்கான 'நல்ல' சந்தர்ப்பமாக அரசு கருதுவதும் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண இணைப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படாத அதேவேளை சந்தர்ப்பத்தை 'நல்ல' வகையில் பயன்படுத்தி மாகாணசபைத் தேர்தலை அவசர, அவசரமாக படைகளின் 'உதவியுடன்' நடாத்த அரசு முற்படுவது முன்னர் இந்தியப்படை 'ஆதரவுடன்' நடந்த முதலாவது வட, கிழக்கு மாகாண சபை தேர்தலையே ஞாபகப்படுத்துவதாக அமையக் கூடுமெனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (கி)

## கொழும்பிலுள்ள தமிழர்கள்

# வெளிநாடுகளிலிருந்தே யாழ். நிலை அறிகிறார்கள்

தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள யாழ்ப்பாணத்தில்இன்றுநடைபெறும் சம்பவங்கள் யாவும் செய்மதிப் படங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு உடனுக்குடன் சென்றடைகிறது.

யாழ்ப்பாண நிலைமைகளை அறிய முடியாத நிலையில் கொழும்பிலுள்ள தமிழர்கள் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் மூலமே யாழ்ப்பாணச் செய்திகளை அறிந்து கொள்வதாக கொழும்பிலிருந்து யாழ். வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தமது உறவினர்கள் அகால மரணமடைந்தமை பற்றிய தகவல்களை வெளிநாடுகளிலுள்ள நண்பர்கள் மூலம் இவ்வாறு பெற முடிந்ததாகவும் மற்றும் சிலர் தெரிவித்தனர்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களை வெளிநாட்டு தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடியதாக இருக்கின்றதாம்.

இதனால் கொழும்பிலுள்ள சிலர் யாழ்ப்பாணச் செய்திகளை அறிவதற்கு வெளிநாடுகளிலுள்ள தமது நண்பர், உறவினர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# ஒரு நாள் வேதனத்தை பயிலுநர் ஆசிரியர் வழங்குவர்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களும் இடம் பெயர்ந்தோரின் நிவாரணத்திற்கென தமது ஒருநாள் வேதனத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

இந்த நிதியை மேற்படி பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் 16-ம் திகதி திங்கட்கிழமை காலை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் வைத்து வழங்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று அங்கு நடை பெறவுள்ள கூட்டத்தில் பல விடயங்களும் ஆராயப்படவுள்ளதாக பயிலுநர் ஆசிரியர் சங்க தெல்லிப்பழைக்கிளைச் செயலாளர் அறிவித்துள்ளார், (கி)

# போதைக்கு ஸ்பிரிட் அருந்திய கணவன் மனைவி ஒன்றாகப் பலி

சட்டவிரோத ஸ்பிரிட் (மதுசாரம்) அருந்தியதால் கணவனும் மனைவியும் பலியானார்கள்

இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.

ஆ. ஆறுமுகம் (55) ஆ. தெய்வானை (50) ஆகிய இருவருமே இவ்வாறு மரணத்தைத் தழுவியவர்களாவர். (ப-3கி)

## இன்று

நல்லூர் பிரதேச எல்லைக்குட்பட்ட சகல வாகன (மோட்டார் சைக்கிள் உட்பட) உரிமையாளர்களும் சாரதிகளும் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர் அலுவலகத்துக்கு சமுகம் அளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெருந்தொகையான கடிதங்கள் தபால் நிலையங்களில் தேக்கம்

யாழ். பிரதம தபால் நிலையத்தில் மட்டும் வெளியிடங்களுக்கு முகவரியிடப்பட்ட 115 தபால் பொதிகள் கடந்த இருவாரங்களாகத் தேங்கியுள்ளன.

இவற்றில் 71 கொழும்பு, மற்றும் தென் பகுதிகளுக்கு முகவரியிடப்பட்டவை. எஞ்சிய 44 பொதிகளும் உள மாவட்டங்களுக்கு அனுப்பப்பட வேண்டியவை.

தற்பொழுது யாழ். மாவட்டத்துக்குள்ளேயான தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்கான தபால் சேவைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று யாழ்ப்பாண முகவரியாளர்களுக்குரிய பெருந்தொகையான தபால் பொதிகள் கொழும்பு மற்றும் தென்பகுதித் தபாலகங்களில் தேங்கியுள்ளன. (கி)

## யாழ். இந்து மாணவருக்கு

யாழ். இந்துக்கல்லூரியின் செஞ்சிலுவைச்சங்க அங்கத்தினரிதும், சென். ஜோன் அம்புலன்ஸ் படை அங்கத்தினரினதும் அவசர கூட்டம் 14-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறுமெனவும், சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் அதிபர் அறிவித்துள்ளார்.

## இலட்சார்ச்சனை

பிரசித்தி பெற்ற நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 16-ம் திகதி திங்கட்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

ஆடிப்பூரத் தினமான 25-ம் திகதி புதன்கிழமை அம்பாளுக்கு 1008 மகா சங்காபிஷேகமும், ருதுசாந்தி விழாவும், சுமங்கலிப் பூஜையும், இலட்சார்ச்சனைப்பூர்த்தியும் பிரார்த்தனைகளும் நடைபெறும். (கி)

# திருமலை அரச பாற்பண்ணையில் தமிழ் ஊழியர் ஐவர் சுட்டுக் கொலை


(முள்ளியான்)

திருமலை 3-ம் கட்டை அரசாங்கபாற்பண்ணையில்வேலை பார்த்து வந்த 9 பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து சின்னத்தம்பி (53) அரசாங்கப் பாற் பண்ணையில் வைத்து ஊர் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரின் மனைவியும் பிள்ளைகளும் கணவனையும் தந்தையையும் இழந்த நிலையில் வடமராட்சி கிழக்குப்பகுதியில் தங்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் மேலும் நான்கு ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# களம் பல கண்ட யாழ். கோட்டை (6)



எங்களுக்குப் பீரங்கிக் குண்டுகள் தேவை. 12 தொட்டு 24 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளில் 3000 அனுப்பி வைக்கவும். 2 இறாத்தல் தொட்டு 4 இறாத்தல் நிறைவரையிலான குண்டுகளில் 2000 அனுப்பி வைக்கவும். பத்தேவியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட துப்பாக்கி மருந்துகள் சிறந்ததாகவிருந்தது. இனிமேல் யாப்னாப் பட்டினத்திலேயே கன்பவுடரைத் தயாரிக்கலாம் என நினைக்கிறேன்.

பார்வைக்கு அழகான விதவைப் பெண்களையும் கலியாணமாகாத கன்னிப்பெண்களையும் இங்கு தடுத்து வைத்துள்ளேன். எங்களுடைய போர் வீரர்களுக்கு அவர்களைக் கலியாணம் செய்து கொடுக்கவுள்ளேன். குடும்பமாகவிருந்து அகப்பட்ட போர்வீரர்களை அவர்களின் கோவாவிற்கும், ஏனையோரை பத்திதேவியாவிற்கும் அனுப்பி வைக்கிறேன். அவர்களைச் சிறையில் வைப்பதோ, போர்த்துக்கல்லிற்கு அனுப்புவதோ உங்கள் சித்தத்தைப் பொறுத்தது..''

ஒல்லாந்தத் தளபதி வன்கோயன், யுத்தத்தால் சிதைவடைந்த கோட்டையைப் புதிதாகக் கட்ட விரும்பினான். அவன் கட்டியது தான் இன்றைய யாழ்ப்பாணக் கோட்டை. இந்தக்கோட்டை பத்தேவியாவில் இருக்கின்ற கோட்டையிலும் பார்க்கப் பெரியது. பன்ரகன் ஐந்துகோண வடிவம்) வடிவினது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிடிபட்ட போர்த்துக்கேயரில் கோட்டை அமைப்பதில் திறனுடையவர்களை அவன் தடுத்து வைத்திருந்தான். அவர்களிற் பலர் டச்சுக்கம்பனியில் (ஒல்லாந்தக் கம்பனி) சேவையாற்ற விருப்பந்தெரிவித்திருந்தனர்.

புதிதாக கட்டப்பட்ட கோட்டையில் ஐந்து பெரிய கொத்தளங்களும், 142 பீரங்கித் தளங்களும் அமைந்தன. ஐந்து காவலரன்களும் இருந்தன. அகன்ற அகழி கோட்டையைச் சுற்றி அமைந்தது, உள்கோட்டைக்கும் அகழிக்

★ செங்கை ஆழியான்

கும் வெளியில் புறச்சுவர் அமையும். ஏறத்தாழ 12 ஏக்கர்ப்பரப்பில் இக்கோட்டையை ஒல்லாந்தர் அமைத்து முடித்தனர்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை திருத்திப் புதுக்கியதுபோல வேறும் பல கோட்டைகளையும் திருத்திக் கட்டினர். ஊர்காவற்றுறைக் கோட்டை எண்கோண வடிவில் அமைக்கப்பட்டது. மன்னார்க் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை பூநகரிக் கோட்டை என்பனவும் கட்டப்பட்டன. காங்கேசன்துறையில் கோட்டையொன்று கட்டத் திட்டமிடப்பட்டு அத்திவாரம் இடப்பட்டது. பின்னர் ஏனோ முற்றுப்பெறாது கைவிடப் பட்டது.

1695 ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டை முருகைக்கற்களால் கட்டி முடிக்கப்பட்டது. பண்ணைக் கடலிலிருந்து அகழி வெட்டி கடல்நீரை நிரப்பினர். இந்தக் கோட்டையின் இரண்டுகொத்தளங்கள் பண்ணைக் கடலை நோக்கியுள்ளன. ஒரு கொத்தளம் வடமேற்குத்திசை நோக்கியும், இன்னொன்று வடகிழக்குத் திசை நோக்கியும் ஐந்தாவது கொத்தளம் தென்கிழக்குத் திசை நோக்கியும் கட்டப்பட்டுள்ளன. இக் கொத்தளங்கள் ஐங்கோணக் கோட்டையின் ஐந்து மூலைகளாகவிருக்கின்றன இவற்றினை இணைத்து 20 அடி அகலமான அடியதில் படிப்படியாக ஒடுங்கி 5 அடிகளாக உச்சியில் குறுகிறது.

இக்கோட்டையின் வாசல் தென் கிழக்குப்பகுதியில் அமைந்திருக்கின்றது. உள்மதில் வாசல் அகழியின் மேலிட்ட பாலத்தினால் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஒல்லாந்தர் அப்பாலத்தை உள்மதிலோடு ஒதுக்கிப் பாதையைத் துண்டிக்கவும் தேவையான போது பாலத்தை இறக்கி இணைக்கவும் வசதிகளைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு மதில்களுக்கும் கீழ் உள்வழிகள் எப்புறமும் நகர வாய்ப்பானவையாகவுள்ளன. சுரங்கப்பாதைகள அகழிக்குவரவும் அவசர காலத்தில் கோட்டையை விட்டு வெளியேறவும் அமைக்கப்பட்டிருந்தன

இப் பன்ரகன் கோட்டைக்குள் சொக்கட்டான் வடிவ கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றையும் ஒல்லாந்தர் அமைத்தனர், இக்கோட்டையின் ஐங்கோணச்சுவர்களில் ஒவ்வொன்றும் ஏறத்தாழ 850 அடி நீளமானவை. ஒல்லாந்தரின் உட்கோட்டையின் சுற்றளவு ஏறத்தாள 4250 அடிகளாகும். இக்கோட்டை ஒரு பக்கம் பண்ணைக்கடலையும் ஏனைய நான்கு பக்கங்களிலும் 120 அடி அகலமான அகழியையும் கொண்டிருக்கின்றது. நீரும் சுரியும் கொண்டதாக இந்த அகழி காணப்படுகின்றது, கோட்டையின் மத்தியில் படைவீரர்கள் கூடுவதற்குப் பெரியதொரு மைதான வெளியும் கோட்டையின் உட்சுவரோடு அதிகாரிகளின் வீடுகளும் படைவீரர் பாசறைகளும் அமைக்கப்பட்டிருந்தன (தொடரும்)

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA 13-07-1990

## சிறிய செய்திகள்

### அன்பளிப்புடன் பலாலியில் ஹேமா

ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாஸ நேற்று பலாலி விமான நிலையத்திற்கு விஜயம் செய்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

இங்கு கடமையிலீடுபட்டுள்ள படையினருக்கு, கொழும்பில் சேகரிக்கப்பட்ட அன்பளிப்புப் பொருட்களை வழங்கவே அவர் இங்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டது, (கி-ஸ்ரீ)

### அழைப்பு

மன்னார் மாவட்ட செயலகத்தில் கடமை புரியும் சகல ஊழியர்களையும் உடனடியாக கடமைக்கு வரும்படி மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் அறிவித்துள்ளார்,

நிவாரணம் உணவு விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்காகவே இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (03)

### பாதுகாப்பாக உள்ளனர்

திருகோணமலை நீர்ப்பாசன திணைக்களத்தை சேர்ந்த சகல அலுவலர்களும் பாதுகாப்புடன் இருப்பதாக அத்திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அங்கு இருப்பவர்களது பெயர் விபரங்களும்தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. தொலைபேசி மூலமே மேற்படிதகவல்கள் யாவும் பெறப்பட்டுள்ளன. (03)

**கொக்காவில்—**

பட்டுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் ஏ. கே. எல்., எம். ஜி-4, ஆர். பி. ஜி. 3, மோட்டர் - 4, ஏ. கே றைபில் 50 ஆகிய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் இத்தாக்குதலின்போது பெண் போராளிகள் உட்பட பதினெட்டு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (03-ஸ்ரீ)

**ஈழத்தமிழர்—**

முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவது குறித்தும், அவர்களது உடைமைக்கு உத்தரவாதமில்லாத நிலை குறித்தும் இங்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழர்களை அகதிகளாக்கி அல்லல் படுத்துவது, நாட்டை விட்டு வெளியேற எண்ணம் ஏற்படுத்துவது இலங்கை அரசின் புதுவித நடவடிக்கை என்றும் இனப் பிரச்சினைத் தீர்வுக்குச் சர்வதேச சமூகத்தின் உதவி நாடுவது இந்தியாவை விலக்கி வைக்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டியுள்ளது என்றும் இக்கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டது.

இது இவ்வாறு இருக்க இலங்கைத் தமிழர் படுகொலை நிறுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கலைஞர், பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப் சிங்குடன் பேசி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

### நிதர்சனம் அறிவிப்பு

சகல தனியார் ஒளிபரப்பு நிலைய உரிமையாளர்களும் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டம்

முறைசாராக்கல்விப்பிரிவின் போதனாசிரியார்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணியளவில் யாழ் கல்வித்திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது. (03)

### வங்கிகள் ஊடாக...

''மலேசியா, சிங்கப்பூர். பர்மா ஒய்வூதியம் பெறுபவர்களுககு இதுவரை காலமும் அவரவர் வீட்டு விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் தற்போதய நெருக்கடிநிலை காரணமாக இவ்வாறு அனுப்புவதில் பல சிரமங்கள் இருப்பதால் நிலமை சீரடையும் வரை அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படும் என்பதனையும் ஜுன் மாதப் பற்றுச் சீட்டுக்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

### ஓய்வூதியம்வழங்க முயற்சி

இம்மாத ஓய்வூதிய வவுச்சர்களை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கான முயற்சிகளை செயலக அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடனே இவை இங்கு கொண்டுவர முயற்சிசெய்வதாக அவர்கள் தெரிவித்தனர்- (03)

### பின்வாங்கியது

நேற்றுமுன்தினம் கட்டைபறிச்சான் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூதூர்ப்பகுதிக்கு பின்வாங்கி சென்றுவிட்டதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை திருகோணமலைக்கடலில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கப்பல்தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் கொல்லப்பட்டதாக கொழும்புவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (03 ஸ்ரீ)

**கணவனுக்கு ...**

அனுப்பப்படுகின்றபோதிலும் ஆசிரியர்கள் கையொப்பத்தை மாத்திரம் 'ஒழுங்காக' வைத்துவிட்டு தத்தம்சொந்த அலுவல்களைக் கவனிக்கப் புறப்பட்டுவிடுகிறார்கள் என்றும் பிள்ளைகள் 'அம்போ' என்ற நிலையில் செய்வதறியாது விழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தென்மராட்சிப் பகுதி இளம் ஆசிரியை ஒருவர் கடமை நேரம் தன் கணவருக்கு 'கிப்ஸ்' சாரம் தேர்ந்தெடுக்க கடை, கடையாக அலைந்ததான தகவலும் வெளியாகியுள்ளது. மருத்துவப்பணிபோல ஆசிரியப்பணியும் புனிதமானது, தெய்வீகமானது என்று மூதாதையர் சொன்னார்கள் ... ஆனால் இவர்களோ கணவருக்கு சாரம் தேடி அலைகிறார்களே என்று வேதனை தெரிவிக்கபபடுகின்றது. (ஸ்ரீ)

# யாழ் கோட்டை இராணுவமுகாமுக்கு 23 நாட்களாக மின்சாரம் இல்லை

(எஸ். ஆர். எம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு கடந்த மாதம் 18ம் திகதியில் இருந்து நீர் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. தற்போது ஜெனரேட்டர்கள் மூலமே கோட்டை இராணுவத்தினர் மின்சாரத்தைப் பெற்றுவருகின்றனர்.

கடந்த 18ம் திகதி இரவு இடம் பெற்ற தாக்குதலில் கோட்டைப் பகுதிக்கு மின் விநியோகிக்கும் 11 கே. வி, மின்மார்க்கங்களில் பாரிய சேதம் ஏற்பட்டது.

இத்தாக்குதலினால் யாழ் கோட்டை இராணுவ முகாம் உட்பட பண்ணை, குருநகர், மண்டைதீவு போன்ற பகுதிகளுக்கான மின் விநியோகமும் பூரணமாகத் தடைப்பட்டது.

இந்த மின்மார்க்கங்களை திருத்துவதற்கான சூழ்நிலைகள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

**ராணுவ வேட்டையில் தமிழர் இரையாவதா?**

## சென்னையில் திராவிடர் கழகமும் இலங்கைத் தூதரகம் முன் ஆட்சேபம்

இலங்கையில் ஒன்றுமறியாத தமிழர் அரசின் இராணுவத்தின் வேட்டைக்கு இரையாகி வருவதனை தமிழகத்தின் மிகப்பெரும் பகுத்தறிவுச் சிந்தனையாளர் எனக் கருதப்பட்ட ஈ. வெ. ராமசாமி (பெரியார்) ஸ்தாபித்த திராவிடர் கழகமும் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து இக்கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி தலைமையில் நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கையின் துணைத் தூதுவராலயத்தின் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது துணைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது, (ஸ்ரீ)

### இராணுவக் கொள்ளை

நேற்று முற்பகல் 10 மணிக்கு செட்டிகுளம் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் செட்டிகுளம் பலநோ கூ சங்கத்தில் கதவுகளை உடைத்து பொருட்களை கொள்ளையடிக்க முனைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து இழப்புகளுடன் இவர்கள் முகாமுக்குப் பின்வாங்கியதாகமேலும் அவர்கள் தெரிவித்தனர். (03- ஸ்ரீ)

### அந்தகாரத்திலும் ஆலயமணி

(காங்கேசன்துறை)

அடியார்கள் எவரும் இல்லாத இல்வேளையிலும் காங்கேசன்துறை ஆலயங்களில் பூசைமணி ஒலி கேட்கின்றது.

பொதுமக்கள் எவருமே இல்லாத காங்கேசன்துறையில்; ஆனந்தப் பிள்ளையார், பிரதானவீதி அம்மன், முதலிவளவு முத்துமாரி அம்மன் ஆகிய ஆலயங்களில் தினமும் காலையில் பூசை நடைபெறுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (ப-10-ஸ்ரீ)

**தள்ளாடி—**

தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பாரிய இழப்புக்களுடன் முகாமுக்கு பின்வாங்கியதாகவும் இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மில்லர், பாரதி வேதமணி, மயூரன் ஆகிய 4 போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. 3-ஸ்ரீ

**புலிகளின்—**

நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்'' என்று சொன்னார். புலிகள் முல்லைத்தீவில் உள்ள இராணுவ முகாம் மீது நடாத்திய தாக்குதலில் பெற்றோல் குதம் ஒன்று தீப்பற்றியதாகவும் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திருமலையிலும் வடபகுதியிலும் கப்பற்படை கப்பல்கள் மீதும் புலிகள் தாக்குதலை நடாத்தினர் எனவும் இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

**காங்கேசன் சீமெந்து ஆலை**

## பீரங்கித் தாக்குதலால் சேதமுறுவதாகத் தகவல்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இராணுவ முகாம் விடுதலைப்புலிகள் வசமாகி அங்கே அவர்கள் நிலை கொண்டிருப்பதால் இத் தொழிற்சாலையை நோக்கி தினமும் பலாலி ,காங்கேசன்துறை இராணுவ முகாம்களில் இருந்து பீரங்கிப் படகுகளில் இருந்து ஷெல்கள் ஏவப்படுகின்றன.

இதனால் தொழிற்சாலை சேதத்திற்குள்ளாகின்றது. யாழ்- காங்கேசன் வீதியில் இருந்து அவதானித்தால் தொழிற்சாலையின் முன்சீற்றுக்கள் உடைந்திருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ப- 10-ஸ்ரீ)

**வல்வையில்**

## கடற்படை கோபாவேசம் வீடுகள் சேதம்; பலர் காயம்

நேற்று முன்தினம் வல்வைப் பகுதி கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளானது.

வல்வை சுங்கப்பகுதிகளையும் ஏனைய மக்கள் குடியிருப்புகளையும் நோக்கி கடற்படையினர் ஷெல்தாக்குதலை நடாத்தினர்.

மேற்படி தாக்குதல்களால் வல்வெட்டி, உடுப்பிட்டி போன்ற இடங்களில் உள்ள பொதுமக்களின் பல வீடுகள் சேதமானதுடன்பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. மீனவரின் படகுகள் பலவும் நிர்மூலமாக்கப்பட்டன. (39- ஸ்ரீ)

## துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த நிலையில்....

கல்முனைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 35 பொதுமக்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இச். சடலங்கள் பின்னர் தகனம் செய்யப்பட்டன.

படையினர்-புலிகள் மோதலில் இந்தப் பொதுமக்கள் இடையில் அகப்பட்டு இறந்ததாக அதற்குக் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி-ஸ்ரீ)

## அகதி உணவு பெறச்சென்றவர் மீளத் திரும்பவில்லையாம்

வவுனியா மாவட்ட அகதிகளுக்கான உணவுப் பொருட்கள் பெறுவதற்காக இராணுவ முகாம் ஒன்றுக்கு சென்ற அதிகாரி ஒருவரை காணவில்லையென தெரியவருகின்றது.

வவுனியா குடியேற்றத் திட்ட அதிகாரி எல், நாகராஜா என்பவரே இவ்வாறு காணாமல் போனவராகும். இவர் இராணுவத்தினரின் அழைப்பிற்கிணங்கவேமுகாமுக்குச் சென்றதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர். (03)

**வீர மரணம்...**

காய் 2-ம்லெப்டிநிலான் (வட்டகச்சி), 2-ம் லெப்டி. ஜெயா (வவுனியா), கோபி (அம்பாறை), நவம் (திருகோணமலை, நிர்மன் (உமையாள் புரம்))வினோத் (திருமலை-தென்னமரவாடி),மருது(புதுக்குடியிருப்பு என்று நேற்றுதெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். 03—ஸ்ரீ

### ஏற்கிறார் ரஞ்சன்

கிழக்கு மாகாணத்தில் அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த உண்மையை நேற்று பாதுகாப்புத்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன கொழும்பில் ஒப்புக்கொண்டார்.

கல்முனையில் இளைஞர்கள் வரிசையாக நிற்கவைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தியை அவர் ம[illegible]த்தார். (ஸ்ரீ)

**ஆனையிறவில்—**

க்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தாக்குதலில் இராணுவத்தினர் பெரு இழப்புக்களுடன் திரும்பிச் சென்றதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (3-ஸ்ரீ)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்'கில் ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.